**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.628/2024 நாள்- 15.11.2024

**வா.சா.1- பேச்சியம்மாள்**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். வா.சா.ஆ.1. புரோநோட்டின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1. புரோநோட்டில் பிரதிவாதிகளின் விலாசம் காட்டவில்லைஎன்றால்சரிதான். ஆனால் ராஜா விலாசம் எழுதாமல் விட்டுவிட்டார் 2ம் பிரதிவாதி உடன் இருந்தார். வா.சா.ஆ.1. புரோநோட்டில் எழுதியவரும் சாட்சியும் என்ற இடத்தில் எழுதியவர் ராஜா என்று குறிப்படப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1. புரோநோட்டில் என்னால் எவ்வளவு தொகை என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1. புரோநோட்டில் 6 முதல் 13 ஆகிய வரிகளில் அடித்தல் உள்ளது என்றால் சரிதான். அந்த அடித்தலில் நானோ பிரதிவாதிகளோ கையொப்பம் செய்யவில்லை என்று சொன்ானல் சரிதான். ஆனால் கையொபபம் செய்யவேண்டும்என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1. கண்ட தொகையை நான் தான் கொடுத்தேன் என் தகப்பனார் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1. புரோநோட்டில் பொன்னனையாவிடம் இருந்தும் மேற்படியாரின் குமாரத்தி பேச்சியம்மாள் என்பவரிடமிருந்தும் தொகை பெற்றுக் கொண்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொன்னனையவை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்ால் அவர் இறந்து விட்டார். என் அப்பாவிற்கு என்னுடன் சேர்ந்து 3 வாரிசுகள் அவர்கள் மற்ற 2 வாரிசுகளும் இந்த வழக்கில் வாதிகளாக இல்லை என்று சொன்னால் பணம் வாங்கியதால் நான் மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் வா.சா.ஆ.1. புரோநோட்டில் பொன்னையாவிடம் இருந்தும் பிரதிவாதிகள் பணம் பெற்றுக் கொண்டதாக எழுதப்பட்டுள்ளதால் பொன்னையாவின் மற்ற வாரிசுகள் இந்த வழக்கில் அவசியமான தரப்பினர்க்ள் என்றும்

அதனால் இந்த வழக்கு பாதிப்படைகிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1. புரோநோட்டில் நடராஜன் மகன் ராஜா என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியின் பெயர் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் கையொப்பம் செய்துள்ளார். வா.சா.ஆ.1 புரோநோட்டில் நடராஜன் மகன் ராஜா என்பது வரைக்கும் ஒரு நபரும் அதற்கு அடுத்து உள்ள வாசகங்கள் வேறு ஒரு நபரும் எழுதியுள்ளார் என்று சொன்னால் 1 ம் பிரதிவாதி அவருடைய முகவரியை எழுதியபின்பு அதற்கு அடுத்து என்ன எழுதவேண்டும் என்று தெரியாது என்று கூறிவிட்டதால் சாட்சி மீத வாசகங்களை எழுதினார். வா.சா.ஆ.1 என்னுடைய விலாசம் என் தகப்பனாரின் விலாசம் காட்டபடவில்லை எ ன்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் நடராஜன் மகன் ராஜா என்பது வரைக்கும் ஒரு நபரும் அதற்கு அடுத்து உள்ள வாசகங்கள் வேறு ஒரு நபரும் எழுதியுள்ளார் என்று அசல் வழக்கிலோ நிருபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் பொன்னையாவிடமிருந்தும் பணம் பெற்ற தாக அசல் வழக்கிலோ நிருபண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு வங்கி கணக்கு உள்ளது ஆனால் பணம் இல்லை. வா.சா.ஆ.1 புரோநோட்டில் கண்ட தொகையை நான் கையிருப்பு பணத்தை வைத்து தான் கொடுத்தேன் வங்கியிலிருந்து எடுத்து கொடுக்கவில்லை. நான் தையல் தொழில் மற்றும் இதர வேலை செய்து வருமானம் ஈட்டி வருகிறேன். எனக்கு ரூ.2,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானமோ வசதி வாய்ப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் ஒரே தெருவில் தான் குடியிருந்து வருகிறோம். பிரதிவாதிகள் எங்கள் ஊரில் ஒரு இடம் வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தை நானும் அதன் உரிமையாளிடம் விலைக்கு கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் கட்டியவீட்டின் காலி மனையின் உரிமையாளரிடம் விலைக்கு கேட்டேன் என்றும் பிரதிவாதிகள் கிரையம் பெற்றுவிட்டதால் எனக்கும்

பிரதிவாதிகளுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் இருந்தது என்றும் அதனால் பிரதிவாதிகள் வாங்கிய சொத்தை அபகரிக்கவேண்டும் என்று தாவா கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்து இந்த வழக்ககை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் இருவரும் இராஜபாளையத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் வீட்டில் வைத்து தான் நான் புரோநோட்டில் கையொப்பம் செய்தார்கள். உண்மையிலேயே வா.சா.ஆ.1 புரோநோட்டை என் வீட்டில் வைத்து எழுதியிருந்தால் அருகில் இருக்கும் நபர்களை சாட்சியாக அழைத்திருப்பேன் என்றும் இராஜபாளையத்தில் உள்ள நபர்களை சாட்சியாக அழைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒரு போதும் என்னிடம் கடன் பெறவில்லை என்றும் அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ல் புரோநோட்டு எழுதிக் கொடுககவில்லைஎன்றும் சொத்தை அபகரிக்கவேண்டி பொய்யாக புரோநோட்டு உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் புரோநோட்டு அடித்தல் திருத்தல் உள்ளதாலும் யார் எழுதிக் கொடுத்தார் என்ற விலாசங்கள் இல்லதாதாலும் வா.சா.ஆ.1 ல் புரோநோட்டு செல்லத்தக்கதல்ல எ ன்றும் அதன் அடிப்படையில் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் புரோநோட்டில் குறிப்பிட்டுள்ள இராஜபாளையம் தாலுகாவில் உள்ள நடராஜன் மகன் ராஜா என்பவர் இந்த 1ம் பிரதிவாதி இல்லை என்றும் அவர் வேறு நபர் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.